**கந்தகெடிய பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 23 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூன் 30 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கந்தகெடிய பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 17 ஊழியர்களின் ரூபா 26,000 பிணை வைப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலுத்த வேண்டிய ரூபா 83,276 ஓய்வூதிய நல்கள் அட்டுறுவாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மூலதன செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,996,724 கடன்கொடுத்தோர் பெறுமதி பட்டோலையின் படி ரூபா 5,045,581 ஆகக் காணப்பட்டது.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவெண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 8,589,295 ஆகக் காணப்பட செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 11,511,721 ஆகக் காணப்பட்டது.

#### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக ரூபா 71,986,229 கூட்டுத்தொகையான 04 சொத்து விடயங்களை கணக்காய்வில் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

#### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) ஒழுங்குவிதிகள் கோவை | |
| (i) 5(7) ஆவது விதி | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 218 ஆவது விதி | காணி கட்டிட மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 371 | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 சந்தர்ப்பங்களில் பல்வேறு தரப்பினர்களிற்கு செலுத்தியிருந்த ரூபா 67,500 முற்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 286,450 தொகையான 16 வைப்புக்கள் கைதவிர்க்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிகள் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | ஓய்வுபெற்ற, மரணித்த 03 ஊழியர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,247 கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 1985 இன் 01 ஆம் இலக்க (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவு | 2001 திசெம்பர் முதல் 2013 ஒக்தோபர் வரையான ஊழியர் சேமலாப நிதியத்திற்கான தொகை குறித்த காலத்தில் செலுத்தப்பட்டிருந்ததால் ரூபா 53,184 தண்டப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் DMS/C/01/PAHA/15 ஆம் இலக்க 2008 மார்ச் 05 ஆந் திகதிய கடிதம் | அங்கீகாரமின்றி ரூபா 44,174 விடுமுறை தினக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) 1988 இன் 56 மற்றும் 2000 இன் 52 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களால் திருத்தப்பட்ட 1980 இன் 49 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் | 33 அரிசி ஆலைகள் மற்றும் 09 கற் குழிகளிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) உள்ளுராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை | 1996 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விலை மதிப்பீட்டின் அடிப்படையில் மாதாந்த குத்தகை பட்டியலிடப்பட்டிருந்தது. |
| (ஏ) பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/91 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2011 ஆம் பந்தி | மீளாய்வாண்டில் 03 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,715,471 ஆகக் காணப்பட்டதுடன், அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,633,121 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானச் சேகரிப்புச் செயலாற்றல்

2016 சனவரி 01 ஆந் திகதி நிலவிய நீர்க் கட்டண நிலுவை வருமானத்தை அறவிடுதல் மீதான செயன்முன்னேற்றம் 41 சதவீதமான மட்டத்தில் காணப்பட்டது.

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபை பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும் ரூபா 1,951,528 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

(அ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டணங்கள் விசேட ஏற்பாடுகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ரூபா 18,550 முத்திரைக் கட்டணம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 455,839 உதவு தொகையினை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பிவைக்காது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) 1971 இன் 08 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் 2008 ஆம் ஆண்டில் அறவிடப்பட்டிருந்த ரூபா 455,839 உதவு தொகை பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

04 நீர் வழங்கல் திட்டத்திற்குரிய 463 நீர் பாவனையாளர்களிடமிருந்து நீர் மானிகளைப் பொருத்தாது தண்ணீர் பாவனைக்காக ரூபா 200 முதல் ரூபா 300 வரையான வீச்சில் நிலையான கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த WP-ZA 5321 ஆம் இலக்க ரூபா 24,928,616 பெறுமதியான மோட்டார் கிரேடர் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

03 இயந்திரங்களும் மோட்டார் வாகனங்களும் 1 ½ ஆண்டு முதல் 04 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.5 திண்மக் கழிவு முகாமைத்துவம்**

குப்பைகள் தரம்பிரிக்கப்பட்டு மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், சேகரிக்கப்படுகின்ற குப்பைகள் கண்டி வீதியிலுள்ள மஹாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணிக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டில் பாதீடானது வருமான மற்றும் செலவினக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

மீளாய்வாண்டில் வருடாந்த கொள்வனவுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்படுத்தல்**

மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) இருப்புக் கட்டுப்பாடு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) கணக்கீடு
(ஈ) வருமான நிர்வாகம்